முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1580

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.01.2024**, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞான சொரூபமே
ஓங்கார ஞான பலம் கொண்ட
ஓங்காரன் என் அவதாரமான அரங்கனே
ஓங்காரனே உயர் ஞானியே உந்தனுக்கு
2. ஓதிடுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
உத்தமமாய் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 12 ம் நாள், 26.01.2024, வெள்ளிக்கிழமை)
மேதினியில் அரங்கன் சக்தி உலகம் அறிய
மேலான ஞானவான்களை இந்த கலியினில் படைக்க
3. படைக்கவே அரங்கனுக்கு சக்தி ஊட்டி
பழுதின்றி ஆறுமுகன் உடன் உள்ளேன்
பெருமைபட அரங்கன் தொடர்பு கூட்டி
பிரணவக்குடில் வந்து உலகோர் தங்கி இனிதே
4. இனிதே அரங்கன் வழி ஞானம் பயில
இணைந்து அரங்கன் தர்மத்தில் தொடர்பு கொள்ள
கனிவேலவன் என் துணையும் ஆசியும்
கடாட்சமும் கூடி இனிதே உலகோர் சிறப்பர் அப்பா
5. அப்பனே ஞான பலம் பெற்றவன் நீ
ஆற்றல்மிக்க ஞானிகளை உருவாக்க வந்த அவதார ஞானி நீ
ஞானியர் உன்வழி நம்பகமுற உலகோர்க்கு
ஞானம் கிட்டி எல்லா வளமும் உண்டாகக்கூடும்
6. ஆகவே அரங்கன் தொடர்புக்கு உலகோர் வர
அனைவருக்கும் ஞான சித்தி கூடி இனிபிறவா பெரும் பேறு
பேராற்றல் மிக்க ஞான லோக மாற்றங்களும்
பிசகு இன்றி நடந்தேறும்

சுப்ரமணியர் யான் அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–